# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 2 பிப்ரவரி 2019 ₹1.00

## குடியரசு தின விழா



70ஆவது இந்தியக் குடியரசு தின விழா, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் தலைமை நிலையத்தில் 26.01.2019அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், தேசியக் கொடியை ஏற்றிவைத்துக் குடியரசு தின உரை நிகழ்த்தினார். மேலும், சிறப்பாகப் பணியாற்றிய பல்கலைக்கழகத்தின் 'சி' மற்றும் 'டி' பிரிவுப் பணியாளர்களைச் சிறப்பு செய்யும் வகையில் அவர்களுக்குச் சிறந்த பணியாளர் விருது வழங்கினார். முன்னதாகத் துணைவேந்தர் அவர்கள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். மேலும், பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி முதல்வர்கள் தத்தம் கல்லூரி வளாகங்களில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தனர். பல்கலைக்கழகப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் குடியரசு தின விழாவில் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

## அனைத்திந்திய நுழைவுத் தேர்வில் அதிக இடங்கள் பெற்றதற்காகப் பல்கலைக்கழகத்திற்கு விருது



வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் வழங்கும் முதுநிலைப் பட்டப் படிப்புகளில் சேர்வதற்கு இணைய வழியில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய அனைத்திந்திய நுழைவுத் தேர்வில் கால்நடை மற்றும் மீன்வள அறிவியல் பிரிவில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் அதிக எண்ணிக்கையில் 16 இடங்களைப் பெற்றது. இதற்கான விருது, 31.01.2019அன்று புதுதில்லியில் நடைபெற்ற "வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகக் கல்வி நிலையங்களின் இயக்குநர்கள் பங்கேற்ற கருத்தரங்கில்" மத்திய வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. ராதா மோகன் சிங் அவர்களால் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்களிடம் வழங்கப்பட்டது.

## தானுவாஸ் வெட்மைக்ரோ செயலி அறிமுகம்




இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ரூபாய் 1.00 இலட்ச நிதியுதவியில் கால்நடை மருத்துவக் கல்வியின் குறைந்தபட்சத் தர விதிமுறைகள்–2016இன் பாடத் திட்டத்திற்கு ஏற்பச் செய்முறைக் கால்நடை நுண்ணுயிரியியல் படிப்பிற்காக "தானுவாஸ் வெட்மைக்ரோ" செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலியில் தகுந்த படங்களுடன் உள்ள பாட உள்ளடக்கம், கால்நடை மருத்துவ நுண்ணுயிரியியலைப் புரிந்துகொள்ள இளநிலைப் பட்ட மாணவர்களுக்குப் பயன்படுவதோடு, அவர்கள் வேண்டிய பொழுது அல்லது வேண்டிய நேரங்களில் எளிதாகப் படிக்கவும் உதவும். கூகுள் பிளே ஸ்டோரில் கிடைக்கப்பெறும் m.tanuvasvetmicro.in மூலம் இச்செயலியைப் பார்வையிட முடியும். இச்செயலியை, 31.01.2019அன்று புதுதில்லியில் நடைபெற்ற வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகக் கல்வி நிலையங்களின் இயக்குநர்கள் பங்கேற்ற கருத்தரங்கில் மத்திய வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. ராதா மோகன் சிங் அவர்கள் அறிமுகம் செய்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பங்கேற்றார். தானுவாஸ் வெட்மைக்ரோ செயலியை உருவாக்கியவர்கள்: இணைப் பேராசிரியர் முனைவர் எம். அனந்த சித்ரா மற்றும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் ஆகியோராவர்.

## அனைத்திந்திய விளையாட்டுப் போட்டிகளில் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கப் பதக்கம் வென்றனர்



லூதியானாவில் உள்ள பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 02.01.2019 முதல் 05.01.2019வரை நடைபெற்ற 19ஆவது அனைத்திந்திய வேளாண்மைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி– 2018–19இன் பல்வேறு பிரிவுகளில் பல்கலைக்கழகத்தின் 45 மாணவர்கள் பங்கேற்றனர். திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவி செல்வி சி. ஸ்ரீவித்யா, உயரம் தாண்டுதல் மற்றும் நீளம் தாண்டுதல் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவி செல்வி எஸ். பிரியா, ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் மாணவி செல்வி வி. மொழியரசி, நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரியின் மாணவிகள் செல்வி எம். கிருத்திகா மற்றும் செல்வி எஸ். கீதா ஆகியோர் இடம்பெற்ற பல்கலைக்கழகக் குழுவினர் பூப்பந்துப் போட்டியில் (மகளிர்) வாகையர் பட்டத்திற்கான கோப்பை வென்றனர். விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த மாணவர்களை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் பாராட்டினார்.

## அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம்

**நாமக்கல், வேளாண் அறிவியல் நிலையம்:** நிலையத்தின் 12ஆவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம்




09.01.2019அன்று நடைபெற்றது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் அறிவியல் ஆலோசனைக் குழுத் தலைவர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் கால்நடை மாதிரிகளின் அடிப்படை ஆய்விற்கான புதிய ஆய்வகத்தைத் துவக்கிவைத்து, வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட முதல் நிலை மற்றும் வயல்வெளிச் சோதனை குறித்த தொழில்நுட்ப மலர், சுத்தமான பால் உற்பத்தி மற்றும் பண்ணையாளர் விவரம் குறித்த குறுந்தகடுகளை வெளியிட்டு, 7 வெற்றிப் பண்ணையாளர்களைக் கௌரவித்தார். மேலும், வேளாண் அறிவியல் நிலையச் செயல்பாடுகளை ஆய்வுசெய்து எதிர்காலச் செயல் திட்டத்திற்கு ஆலோசனை வழங்கினார். வேளாண் அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந. அகிலா, 11ஆவது அறிவியல் ஆலோசனைக் கூட்டப் பரிந்துரைகளின்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றியும், பணி விவரங்களையும் எடுத்துரைத்தார். நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள் தாம் மேற்கொண்ட பணி விவரங்களைச் சமர்ப்பித்தனர். கூட்டத்தில் 2017–18, 2018–19ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட முதல் நிலை மற்றும் வயல்வெளிச் சோதனையில் வெற்றிகண்ட தொழில்நுட்பங்கள், காளான் வளர்ப்பு மற்றும் இயற்கை விவசாய நடவடிக்கை குறித்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. விரிவாக்கக் கல்வி இயக்குநர் (பொ.) முனைவர் டி. ராமசாமி, ஐதராபாத், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (மண்டலம்–10) வேளாண்மைத் தொழில்நுட்பப் பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ஒய்.ஜி. பிரசாத், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் எச். பிலிப், அறிவியல் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் மற்றும் விவசாயப் பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினர்.

**குன்றக்குடி, வேளாண் அறிவியல் நிலையம்:** நிலையத்தின் 15ஆவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம் 10.01.2019அன்று நடைபெற்றது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் அறிவியல் ஆலோசனைக் குழுத் தலைவர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் வேளாண் அறிவியல் நிலைய வளாகத்தில் மரக்கன்று நட்டு, விவசாயிகள் விவரம் மற்றும் அவர்களின் வெற்றிக் கதைகள் இடம்பெற்ற குறுந்தகடை வெளியிட்டு, வேளாண் நிலையச் செயல்பாடுகளை ஆய்வுசெய்து ஆலோசனைகள் வழங்கினார். முதுநிலை விஞ்ஞானி மற்றும் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சு. செந்தூர்குமரன், வேளாண் அறிவியல் நிலையத்தின் 2017–18 மற்றும் 2018–19ஆம் ஆண்டிற்கு உட்பட்ட நிலையப் பணிகளை எடுத்துரைத்தார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் (பொ.) முனைவர் டி. ராமசாமி, ஐதராபாத், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (மண்டலம்–10) வேளாண்மைத் தொழில்நுட்பப் பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ஒய்.ஜி. பிரசாத், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் எச். பிலிப், அறிவியல் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் மற்றும் விவசாயப் பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினர்.

## தர மேலாண்மைப் பயிற்சி

பல்கலைக்கழகத்தின் அடிப்படை அறிவியல் புலம் மூலம் “மேலாண்மை முறைகள் மற்றும் உள் தணிக்கை– ISO/I EC 17025:2017” குறித்த பயிற்சி, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 22.01.2019 முதல் 25.01.2019 வரை நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். இந்தியத் தரவியல் துறையின் முன்னாள் இயக்குநர் திருமதி பி. ராஜலட்சுமி அவர்கள் பயிற்சி வாய்ப்புகள் பற்றிப் பேசினார். முன்னதாகக் கால்நடைப் பராமரிப்புப் புள்ளியியல் மற்றும் கணினிப் பயன்பாட்டியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ம. திருநாவுக்கரசு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் மற்றும் பயிற்சி இயக்குநர் முனைவர் க. சரத்சந்திரா அவர்கள் நன்றி கூறினார். பல்வேறு இடங்களைச் சார்ந்த 32 பேர் பயிற்சியில் பங்கேற்றனர். 25.01.2019அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் தேசிய அங்கீகார வாரிய இயக்குநர் முனைவர் என்.வெங்கடேஸ்வரன் அவர்கள் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

### தனிநபர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் சேலம், அண்ணா மேலாண்மை நிலையமும் இணைந்து கல்லூரிப் பேராசிரியர்களுக்குத் தனிநபர் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை 22.01.2019 மற்றும் 23.01.2019ஆம் நாள்களில் நடத்தின. பயிற்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் துவக்கிவைத்தார். பயிற்சி வல்லுநர்களாகச் சென்னையைச் சார்ந்த உளவியலாளர் ஜி. விஜயகுமார், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் முனைவர் பி. தாமோதரன் ஆகியோர் செயல்பட்டனர். மொத்தம் 97 பேராசிரியர்கள் பயிற்சியில் கலந்துகொண்டனர்.

### மாதிரித் திட்ட அறிக்கை தயாரித்தல் பயிற்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பராமரிப்புப் பொருளியல் துறையால் "கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகளுக்கான மாதிரித் திட்ட அறிக்கை தயாரித்தல்" பயிற்சி, 29.01.2019 முதல் 31.01.2019 வரை நடத்தப்பட்டது. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்புப் புள்ளியியல் மற்றும் கணினிப் பயன்பாட்டியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ம. திருநாவுக்கரசு அவர்கள் பயிற்சியின் துவக்க விழாவிற்குத் தலைமை வகித்துப் பயிற்சிப் பாடத்தொகுப்பினை வெளியிட்டார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பயிற்சி ஒருங்கிணைப்பாளர் மற்றும் கால்நடைப் பராமரிப்புப் பொருளியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வி. பழனிசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். 31.01.2019 அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமை வகித்தார். பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் திட்ட அறிக்கை தயாரித்தல் பற்றிய குறுந்தகட்டினை வெளியிட்டு, நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பல்கலைக்கழகத்தின் பல்வேறு மையங்களிலிருந்து மொத்தம் 33 பேராசிரியர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

### விவசாயிகளுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி

**வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்:** இம்மையமானது தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை நிதியுதவியில் பண்ணையாளர்களுக்காக "இலாபகரமான கறவை மாட்டுப்பண்ணைக்கான இனப்பெருக்க மேலாண்மை" (பகுதி II) எனும் வழிகாட்டுதல் நிகழ்ச்சியை 09.01.2019அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள காயிதே மில்லத் நினைவரங்கத்தில் நடத்தியது. வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி.அ. ராமன் இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் செசிலியா ஜோசப் அவர்கள் "கறவை மாடுகளில் இனப்பெருக்க மேலாண்மை உத்திகள்" குறித்துச் சிறப்புரை ஆற்றினார். 250 பண்ணையாளர்கள் பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

**சேலம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்:** இம்மையமானது பண்ணையாளர்களுக்காக "இலாபகரமான கறவை மாட்டுப் பண்ணைக்கான இனப் பெருக்க மேலாண்மை" எனும் வழிகாட்டுதல் நிகழ்ச்சியை 24.01.2019அன்று வனவாசி கிராமத்தில் நடத்தியது. நிகழ்ச்சியில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ம. செல்வராஜீ மற்றும் மையப் பேராசிரியர்கள் தொழில்நுட்ப விரிவுரை வழங்கினர். சேலம் மாவட்டத்தைச் சார்ந்த 250 முன்னோடி விவசாயிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### பயிற்சி

- காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தால் "செம்மறி மற்றும் வெள்ளாடு வளர்ப்பு" பற்றிய செயல்முறைப் பயிற்சி, 02.01.2019அன்று நடத்தப்பட்டது. பயிற்சியின் நிறைவு விழாவில் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஏ.வி. ஓம்பிரகாஷ் அவர்கள் "ஆட்டுக் குட்டிகள் பராமரிப்பு" குறித்த மடிப்பிதழ் வெளியிட்டுப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். 17 பண்ணையாளர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.
- சிறந்த முறையிலான கறவை மாட்டுப் பண்ணை மேலாண்மைக்காகக் காளை நலம் பேணுநர்க்கு வழிகாட்டுதல் பயிற்சி, மாதவரம் கால்நடைப் பண்ணை வளாகத்தில் 04.01.2019அன்று நடைபெற்றது. சென்னை, அலமாதி உறைவிந்து நிலையத்தின் 18 பயிற்சியாளர்கள் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்த கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஏ.வி. ஓம்பிரகாஷ் அவர்கள், பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.
- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மைய நிதியுதவியுடன் "இலாபகரமான கறவை மாடு வளர்ப்பு" பற்றிய செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சி, 21.01.2019 முதல் 01.02.2019 வரை நடத்தப்பட்டது. ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மைய இயக்குநர் திரு. ஜி. ரங்கநாதபிரபு, மாவட்ட முன்னோடி வங்கிப் பொதுமேலாளர் திரு. ரவிச்சந்திரன் ஆகியோர் பங்கேற்று, வங்கிக் கடன் வழிமுறைகள் மற்றும் மானியத் திட்டங்கள் குறித்துக் கலந்துரையாடினர். மொத்தம் 25 பண்ணையாளர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.
- நாகர்கோவில், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) நிதியுதவியில் "கன்னியாகுமரி மாவட்ட ஊரகப் பெண்களின் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஜப்பானியக் காடை வளர்ப்பு" குறித்த பயிற்சி, இரு தொகுதியாக 23.01.2019–25.01.2019 மற்றும் 30.01.2019–01.02.2019ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு. பி.எஸ். சைலேஷ் அவர்கள் பயிற்சியைத் தொடங்கி வைத்தார். நாகர்கோவில், கால்நடைப் பராமரிப்பின்

கூடுதல் இயக்குநர் மருத்துவர் ரெ. சுவாமிநாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மொத்தம் 60 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறைமூலம் நபார்டு வங்கி நிதியுதவியுடன் “தமிழகத்தில் காவிரிப் பாசனப் பகுதியின் பண்ணையாளர்களுக்கு அறிவியல் முறையிலான எருமை மாடு வளர்ப்புப் பயிற்சி” 23.01.2019 முதல் 25.01.2019 வரை நடத்தப்பட்டது. பயிற்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் துவக்கிவைத்து, பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். தஞ்சாவூர், நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் முனைவர் க. சுப்பிரமணியன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். மொத்தம் 30 பண்ணையாளர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் நடுவூர், மாவட்டக் கால்நடைப் பண்ணையின் துணை இயக்குநர் மருத்துவர் க. தமிழ்ச்செல்வன் அவர்கள் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்.

## மண்டலப் பயிலரங்கு

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் கால்நடை வளர்ப்போர்க்கான மண்டலப் பயிலரங்கு, 30.01.2019அன்று நடத்தப்பட்டது. இதில் தேனி, திண்டுக்கல், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களைச் சார்ந்த 10 பேராசிரிர்கள் உட்பட 40 விவசாயிகள் மற்றும் கால்நடைப் பண்ணையாளர்கள் பங்கேற்றனர்.

## விவசாயிகள் மற்றும் அறிவியலாளர் கலந்துரையாடல் நிகழ்ச்சி



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறை சார்பாக 30.01.2019அன்று “கறவை மாடுகளில் மலடு நீக்கச் சிகிச்சை முகாம் மற்றும் கறவை மாடுகளில் இனப்பெருக்க மேலாண்மை பற்றிய விவசாயிகள் மற்றும் அறிவியலாளர் கலந்துரையாடல்” நிகழ்ச்சி நடைபெற்றது. முகாமைக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றி, விவசாயிகளுக்குத் தாதுவாஸ் தாது உப்புக் கலவை மற்றும் கால்நடைகளின் இனப்பெருக்கத்தினை மேம்படுத்துவதற்கான மருந்துப் பொருள்களை வழங்கினார். முகாமில் 93 மாடுகளுக்கு இலவசமாக மலடுநீக்கச்சிகிச்சை அளிக்கப்பட்டது. விவசாயிகள் மற்றும் அறிவியலாளர் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் 126 விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர். மேலும், கல்லூரியின் சிகிச்சைத் துறைகளைச் சார்ந்த பேராசிரியர்கள் பங்கேற்று, விவசாயிகளின் சந்தேகங்களுக்குப் பதிலளித்தனர்.

## விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவர்களுக்காக “ராகிங் இல்லா வளாக உருவாக்கம்” குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 08.01.2019அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஸ்வர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றினார். திருநெல்வேலி, மானூர் வட்டக் காவல் ஆய்வாளர் திரு. ஜீவன்குமார் அவர்கள் “ராகிங் இல்லா வளாக உருவாக்கம்” குறித்துச் சிறப்புரை ஆற்றினார்.

## பொங்கல் விழா

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய விடுதி வளாகத்தில் 10.01.2019அன்றும் கால்நடைப் பண்ணை வளாகத்தில் 11.01.2019அன்றும் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவில் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஸ்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை பண்ணை வளாகத்தில் உள்ள கறவை மாட்டுப் பண்ணையில் பொங்கல் விழா 11.01.2019அன்று கொண்டாடப்பட்டது. விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார், கல்லூரிப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொணடனர்.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டம் சார்பாகத் தத்தெடுக்கப்பட்ட சின்னகரசப்பாளையம் கிராமத்தில்



பொங்கல் விழா 11.01.2019அன்று கொண்டாடப்பட்டது. விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் பரிசுகளை வழங்கினார். 112 இளநிலைப் பட்ட மாணவர்கள் விழாவில் பங்கேற்றனர். மேலும், கல்லூரியின் கால்நடைப் பண்ணை வளாகத்தில் பொங்கல் விழா 11.01.2019அன்று கொண்டாடப்பட்டது.
- மேல்மருவத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் ஊனமலை கிராமத்தின் அரசு நடுநிலைப்பள்ளியில் பொங்கல் விழா 11.01.2019அன்று கொண்டாடப்பட்டது. விழாவில் 110 மாணவர்கள் பங்கேற்றனர். பள்ளித் தலைமையாசிரியை திருமதி டாரதி, போட்டியில் வென்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.
- மாதவரம், கால்நடைப் பண்ணை வளாகத்தில் 29.01.2019அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள், கோ–5 பசுந்தீவனக் கரணைகளை விவசாயிகளுக்கு வழங்கினார். மேலும், பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற பண்ணை வளாகப் பணியாளர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர்(பொ.) முனைவர் ஏ.வி. ஓம்பிரகாஷ், விரிவாக்கக் கல்வி இயக்குநர்(பொ.) முனைவர் டி. ராமசாமி ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

### வெள்ளைச் சீருடை அணிவித்தல் நிகழ்ச்சி

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 2015–16ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த நான்காம் ஆண்டு இளநிலைப் பட்ட மாணவர்களுக்கு வெள்ளைச் சீருடை அணிவித்தல் நிகழ்ச்சி 07.01.2019அன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சிறப்புரை ஆற்றிக் கால்நடை மருத்துவச் சிகிச்சை சங்கத்தைத் துவக்கிவைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றினார். தஞ்சாவூர் மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் மருத்துவர் ஐ. தனபாலன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தொன்ரம்பட்டு, நடமாடும் மருத்துவப் பிரிவின் மருத்துவர் க. புனிதா, மாவட்ட முதன்மைச் சுகாதார மைய முதன்மை மருத்துவர் இந்திரா மற்றும் குழுவினர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### பரிஷா பே சர்ச்சா 2.0 நிகழ்ச்சி – நேரடி ஒளிபரப்பு

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் (யுஜிசி) வழிகாட்டுதல்படி பாரத பிரதமரின் “பரிஷா பே சர்ச்சா 2.0” நிகழ்ச்சி, 29.01.2019அன்று திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. நிகழ்ச்சியைக் கல்லூரியின் அனைத்து இளநிலைப் பட்ட மாணவர்களும் கண்டுகளித்தனர்.

### முத்தமிழ் விழா

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் முத்தமிழ் விழாவின் தொடக்க விழா “அதீதம் – 2019”, 08.01.2019அன்று கொண்டாடப்பட்டது. விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமையேற்று உரையாற்றினார். நாமக்கல், அறிஞர் அண்ணா கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த் துறைப் பேராசிரியர் முனைவர் அரசு பரமேஸ்வரன் அவர்கள் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

### உழவர் இல்லம் திறப்பு விழா




மதுரை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையத்தில் புனே, வெங்கடேஸ்வரா குஞ்சுப்பொரிப்பக (தனியார்) நிறுவன நிதியுதவியில் உருவான “பத்மஸ்ரீ டாக்டர் பி.வி. ராவ் நினைவு உழவர் இல்லக்” கட்டடத்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் 10.01.2019அன்று திறந்துவைத்தார். வெங்கடேஸ்வரா குஞ்சுப் பொரிப்பகத்தின் இணைத் தலைமை மேலாளர் திரு. ஜி. பாலாஜி வீரராகவன், ஒசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் பி. முருகானந்தம், கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் கோ. தினகர் ராஜ் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பங்கேற்பு

### துணைவேந்தர்கள் கருத்தரங்கு

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், 2019 ஜனவரி 30 மற்றும் 31ஆம் தேதிகளில் நடைபெற்ற வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களின் ஆண்டுக் கருத்தரங்கு மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிலையங்களின் இயக்குநர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் பங்கேற்றார்.

### 28ஆவது தேசியக் கால்நடை ஒட்டுண்ணியியல் மாநாடு



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், 28.01.2019அன்று திருப்பதி ஸ்ரீவெங்கடேஸ்வரா கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற “கால்நடை, கோழியினங்களில் ஒட்டுண்ணி நோய்களை நிலையாகக் கட்டுப்படுத்தல் மற்றும் பொதுச் சுகாதார முக்கியத்துவத்திற்கான புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் வழிமுறைகள்” பற்றிய 28ஆவது தேசியக் கால்நடை ஒட்டுண்ணியியல் மாநாடு மற்றும் தேசியக் கருத்தரங்கில் முதன்மை விருந்தினராகப் பங்கேற்றார்.

### 3ஆவது பன்னாட்டுக் கால்நடை ஆயுர்வேத மருத்துவக் கருத்தரங்கு

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், 17.12.2018அன்று ஆனந்த், தேசியப் பால்வள மேம்பாட்டு ஆணையத்தில் நடைபெற்ற கால்நடை ஆயுர்வேத மருத்துவக் கருத்தரங்கின் துவக்க அமர்வில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, “மரபுசார் கால்நடை மருத்துவத்தில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களின் பங்கு” குறித்து விரிவுரை வழங்கினார்.

### கர்நாடகக் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக நிறுவன நாள்

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், 17.01.2019அன்று நடைபெற்ற கர்நாடகக் கால்நடை மருத்துவ மற்றும் மீன்வள அறிவியல் பல்கலைக்கழகத்தின் 14ஆவது நிறுவன நாள் விழாவில் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று, “இந்தியாவில் மேம்பட்ட கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் கால்நடை மருத்துவச் சேவைகள்” குறித்து உரையாற்றினார்.

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG(CCR)/WPP-708/2018-2020
REGISTERED No.TN/CC(S)DN/569/18-20

Posted on 04.03.2019 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

## நிதியுதவி




இளநிலைப் பட்டப் படிப்பில் சிறப்பிடம் பெற்ற செல்வி ஜி. தரணி, திரு. எம். ராஜ்குமார், செல்வி ஏ.எஸ். பிரவீனா, செல்வி எஸ். பிரியதர்ஷினி, செல்வி ஏ. சிவகாமசுந்தரி, திரு. கே. பிரவீன்ராய், செல்வி எஸ். ஸ்நேகா ஆகிய ஏழு மாணவர்களுக்கு, 'வெற்றி 1968 அறக்கட்டளை' வழங்கிய நிதியுதவியைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலசந்திரன் அவர்கள் 11.01.2019அன்று வழங்கினார். இந்நிகழ்வில் வெற்றி அறக்கட்டளைத் தலைவர் மற்றும் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் கு. துளசி, முன்னாள் அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் வி. ராமசாமி மற்றும் அறக்கட்டளையின் பிற பொறுப்பாளர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

## நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டத்தின் மூலம் "தடை செய்யப்பட்ட நெகிழிப்பொருள்கள்" குறித்த விழிப்புணர்வுப் பேரணி 09.01.2019அன்று நடத்தப்பட்டது. பேரணியில் 150 மாணவர்கள் பங்கேற்றனர். மேலும், இலவசக் கண் பரிசோதனை



முகாம், கல்லூரி வளாகத்தில் 23.01.2019அன்று நடத்தப்பட்டது. முகாமில் 175 மாணவர்கள் மற்றும் 72 கல்லூரிப் பணியாளர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

## பணி ஓய்வு



பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மையத்தின் தடுப்பூசி ஆராய்ச்சி மையம் – நச்சுயிரித் தடுப்பூசிகள் பிரிவின் ஆய்வக உதவியாளர் திரு. எம். மோசஸ் சத்ய வீரா அவர்கள் 31.01.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 10.01.1961இல் பிறந்த இவர், 27 ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மையத்தின் தடுப்பூசி ஆராய்ச்சி மையம் – நச்சுயிரித் தடுப்பூசிகள் பிரிவின் உடனாள் திரு. சி. சங்கரன் அவர்கள் 31.01.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 21.01.1959இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் திறனறிப் பணியாளர் திரு. எம். தர்மலிங்கம் அவர்கள் 31.01.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 03.01.1959இல் பிறந்த இவர், 32 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.

**பதிப்புக் குழு**

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலசந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா